பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 10 செவ்வாய்க்கிழமை 24.06.2025 கதிர் 227

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் தமிழ்க் கட்சிகள் இடையேநிகழும்அதிகாரிஇழுபறிகள் இந்த வாரம் முழுவதும் தொடரும் என்றேதெரிகின்றது.என்னதான் ☞2

## 40 வருடங்களின் பின்னர் மூதூரில் தமிழ் அரசு அதிகாரம்

(ஹஸ்பர்)

மூதூரில் நான்கு தசாப்களின் பின் தலைமைப் பதவியை இலங்கை தமிழ் அரசு கட்சி கைப்பற்றியுள்ளது அது போன்று திருகோணமலை மாநகர சபையையும் கைப்பற்றியுள்ளது என இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை மாநகர சபை முதல்வர் தெரிவு இடம்பெற்ற பின் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையில் உள்ள மாநகரங்களில் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய வகையில் திருகோணமலை மாநகரத்தை நிர்வகித்துக் காட்டுவோம் என்றும் அவர் கூறினார்.

“திருகோணமலை மாநகர சபையின் வளர்ச்சிக்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் இன, மத ,மொழி பேதமின்றி ஒன்றிணைந்து அனைத்து செயற்படவேண்டும் என்று கேட்கின்றேன்“ என்று திருகோணமலை மாநகர சபையின் முதல்வராகத் தெரிவாகிய கந்தசாமி செல்வராஜா தெரிவித்தார்.

# வலி. வடக்கு மக்கள் போராட்டம் மூன்றாவது நாளாகவும் நீடிப்பு

### ஆளும்தரப்பு பாராமுகம்: மக்கள் விசனம்

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 2400 ஏக்கர் காணிகளை விடுவிக்க கோரி மயிலிட்டியில் மக்கள் தொடங்கிய அறவழிப் போராட்டம் நேற்று மூன்றாம் நாளாகவும் தொடர்ந்தது. எனினும் இந்தப் போராட்டம் குறித்து ஆளும்தரப்பு அக்கறை காட்டவில்லை என்பது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

கடந்த 35 வருடங்களாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி சனிக்கிழமை மயிலிட்டி சந்தியில் இந்தப் போராட்டம் தொடங்கியது. மூன்றாவது நாளில் 500ற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் கலந்துகொண்டனர். போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளவர்களுக்கு உணவு சமைத்து வழங்கப்படுகின்றது.



மயிலிட்டி, பலாலி, அந்ரனிபுரம், காங்கேசன்துறைஉள்ளிட்டபகுதிகளில் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளின்உரிமையாளர்கள். ☞2

# தமிழர்களுக்கான நீதிக்காக தொடர்ந்து போராடுவோம்

## செம்மணியில் இரவிரவாக எரியும் ‘அணையா விளக்கு‘



தமிழ் மக்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநிதிகளை

உலக நாடுகள் அறிந்திருந்தாலும் நீதிக்காக மக்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்க வேண்டும் என யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் தெரிவித்தார்.

செம்மணியில் நேற்று ‘அணையா விளக்கு‘ போராட்டம் தொடங்கிய பின்னர்இதனைத்தெரிவித்தார்.காலை 10 மணிக்குத் தொடங்கிய போராட்டம் இரவிரவாகத் தொடர்ந்தது. இன்றும் நாளையும்கூடஅதுஇடைவிடாது ☞2

### மத்திய கிழக்குப் போர்ச் சூழலினால்

## பொருளாதார மந்த நிலமை வரலாம் மறுசீரமைப்பு நடவடிக்கை அவசியம்

### நிபுணர்கள் முன்கூட்டியே அறிவுரை

உலக சந்தையில் எரிபொருள் விலையுடன் இலங்கையின் எரிபொருள் விலையை சமநிலைப்படுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது. இவ்வாறான நிலைமைகளால் இலங்கையில் பொருளாதார மந்த நிலைமை ஏற்படக் கூடிய அபாயமும் காணப்படுகிறது. எனவே பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய பொருளாதாரமறுசீரமைப்புக்களைமுன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும் என பொருளாதாரஆய்வாளர்தயநாத்பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதும் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுசுமார்நான்கரைபில்லியன்டொலர் எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது. மத்திய கிழக்கு மோதலால் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தால், எமக்கும் இறக்குமதி செலவு அதிகரிக்கும். எனவே மாத இறுதியில் எரிபொருள் விலைகள்சடுதியாகஅதிகரிக்கக் கூடியஅபாயம்காணப்படுகிறது.

அத்தோடு மத்திய ☞2

### யாழ். அணையா விளக்கு போராட்டத்திற்கு ஆதரவாக

## ஒந்தாச்சிமடத்தில் நேற்று முன்னிரவு கொழுந்துவிட்டெரிந்த தீப்பந்தங்கள்



செம்மணி மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரும் அணையா விளக்கு போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக மட்டக்களப்பு மாவட்டம் கோட்டைக் கல்லாறு, ஒந்தாச்சிமடம் பாலத்தில் நேற்று முன்னிரவில்தீப்பந்தப்போராட்டம் நடைபெற்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் ☞2

## நேற்று கொழும்பை வந்தடைந்தார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் நேற்று கொழும்பை வந்தடைந்தார். அவரை வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா வரவேற்றார். அவர் நாளைமறுதினம் வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

கொழும்பை வந்தடைந்ததுமே வோல்கர் டர்க், பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இலங்கையில் மனித உரிமைகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது. ☞2

## கட்டாரில் உள்ள அமெ. தளங்கள் மீது ஈரான் பதிலடி ஏவுகணைத் தாக்குதல்

### இலங்கை விமானங்கள் திருப்பிவிடப்பட்டன

தனது நாட்டிலுள்ள அணு உலைகள் மீது அமெரிக்க வான் வழிக் குண்டுகளை வீசியும் தெமஹாக் ஏவுகணைகளை வீசியும் தாக்குதல் நடத்திய நிலையில் அதற்குப் பதிலடியாக ஈரான் கட்டாரிலுள்ள அமெரிக்க படைத் தளம் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால்ஏற்பட்டுள்ள புதிய பதற்றங்களுக்கு மத்தியில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான 5 ஶ்ரீலங்கன்ஏர்லைன்ஸ்விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளன.

அதன்படி, மஸ்கட் விமான நிலையம் மற்றும் டுபாய் விமான நிலையத்திற்கு தலா இரண்டு விமானங்கள் திருப்பி ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொள்கைக்கூட்டு, பழிக்குப்பழி என்றெல்லாம் வீர வசனம் பேசினாலும் நடப்பதெல்லாம் வெறும் கட்சி அரசியல்தான், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மோதல்தான் என்பதையே தொடக்கத்திலிருந்து இந்தப் பத்தியில் நான் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருக்கின்றேன். அதுதான் நிகழ்ந்தும் வருகின்றது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸோடு யாழ்ப்பாணத்தில் கொள்கைக்கூட்டு வைத்திருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, இங்குள்ள சபைகளில் தமிழ் அரசுக் கட்சியோடு ஆக்கிரோசமாக மோதிக்கொண்டு, வடக்குக்கு வெளியே தமிழ் அரசுடன் கள்ளத் தொடர்புகளைப் பேணி வருவது வெளிப்படை. நேற்றுத் திருகோணமலை நகர சபையிலும் அந்தக் கள்ள உறவை வெளிப்படையாகப் பார்க்க முடிந்தது. இதை அவர்கள் ஒன்றும் இரகசியமாகவும் செய்யவில்லை. முன்னரேயே தொலைக்காட்சிப் பேட்டிகளிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் வெளிப்படையாகவே சொல்லியுமிருந்தார்கள். யாழ்ப்பாணத்திற்கு வெளியே தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கு எந்த ஆதரவும் இல்லை என்பதால் தாங்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே தமிழ் அரசுக் கட்சியோடு கள்ளக் கூட்டு வைப்போம் என்பதைத் தாம் கஜேந்திரகுமாரிற்கே நேரில் சொல்லியிருந்தார்கள் என்பதை புளொட் தலைவர் சித்தார்த்தன் ஒரு நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இப்போது நடப்பதெல்லாவற்றையும் பார்க்கும்போது அது உண்மை போன்றுதான் தோன்றுகின்றது. ஆகமொத்தத்தில் கொள்கைக் கூட்டு என்று தமிழ் மக்களிடம் உருட்டோ உருட்டு என்று உருட்டியது அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும்தான் என்ற வகையில்தான் கதை நகர்கின்றது. எப்போதும்போல் தமது அரசியலுக்கு ஒரு புனிதத்துவத்தைப் பூசி மெழுக அவர்கள் எடுத்த நடவடிக்கை இன்று சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்திருக்கின்றது.

அதுபோகட்டும், இந்த வாரத்தில் இன்னும் பல சபைகள் அமைக்கப்படவேண்டியுள்ள நிலையில், தமிழ் அரசுக் கட்சிக்குள் களேபரங்கள், குழப்பங்கள், கட்சியா தனிநபர் அரசியலா என்ற மோதல்கள் எல்லாம் தாராளமாக நடந்து வருகின்றன. நீண்டகாலமாகவே காலமும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை என்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் என்கிற நிலை நீடித்து வந்தது. அவர்கள்தான் தலைவர், செயலாளர் என்கிற பொறுப்புக்களை வகித்து வந்தார்கள். மட்டுமல்ல கட்சியின் மாவட்ட, தொகுதிக் கிளைத் தலைவர் பதவிகளையும் அவர்களே கொண்டிருந்தார்கள். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறையத் தொடங்க இந்த நிலமையில் மாற்றம் வரத் தொடங்கியது. மாவை சேனாதிராசா நாடாளுமன்ற ஆசனத்தை இழந்தபோது இந்த நிலை தயாரானது. ஆனால், அதனைப் பயன்படுத்திக்கொண்டு கட்சியைத் தனது கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்து தனது பிடியை இறுக்குவதற்கு அவர் தவறிவிட்டார். அதனால் அவர் கட்சியையும் இழக்கும் நிலைக்கு இறுதிக் காலத்தில் வந்திருந்தார்.

இப்போது கட்சியின் தலைவர், செயலாளர் இருவருமே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லர். அதனால் அவர்கள் கட்சியின் கட்டுக்கோப்பையும் அதில் தமது பிடியையும் இறுக்குவதில் மெல்ல மெல்ல காய் நகர்த்தி வருகின்றார்கள். இதனால் முதலில் பாதிக்கப்படுபவர்கள் இது நாள் வரையில் பெயருக்குக் கட்சியையும் வாக்குக்கு ஒரு அரசியலையும் நடத்தி ஏமாற்றிக்கொண்டு திரிந்தவர்கள். அதாவது மக்கள் மத்தியில் தான் அறியப்படுவதற்கும், இலகுவில் வெற்றி பெறுவதற்குமாக தமிழ் அரசுக் கட்சியில் இருந்துகொண்டு, தனக்கு மட்டுமே வாக்குகள் அதிகமாகக் கிடைக்கவேண்டும் என்பதற்காக கட்சிக் கொள்கையை மீறிய அரசியல் செய்பவர்களாக இவர்கள் இருந்தார்கள். இத்தகையவர்கள் இப்போது கட்சியின் கிடுக்கிப் பிடிக்குள் சிக்கி வருகின்றார்கள். இது அவர்களுக்கு செரிமானம் செய்யமுடியாத பிரச்சினையாக மாறி வருகின்றது.

இந்தப் பிரச்சினையின் எதிரொலி அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேசசபையிலும் எதிரொலிக்கின்றது. அங்கு கடந்த காலத்தில் தவிசாளராகப் பதவி வகித்தவர் ஜெயசிறில். இந்தத் தடவையும் அவரே தவிசாளர் என்ற ரீதியில் தேர்தலின்போது காய்கள் நகர்த்தப்பட்டன. ஆனால், இப்போது நிலமை அதற்குச் சாதகமாக இல்லை. பொதுவேட்பாளர் உள்ளிட்ட விடயங்களில் சிறீதரன் பக்கம் நின்றவர் அவர். அதாவது கட்சி எடுத்த கொள்கைக்கு மமாறாக தனித்து அரசியல் நடத்துவோர் குழுவின் அங்கத்தவராக இருந்தவர். பழையகூட்டமைப்பு நண்பர்களின் பால் பரிவும் ஆதரவும் கொண்டவரும்கூட. இப்போது அதெல்லாம் அவரது தவிசாளர் கனவு மீது இடியாக இறங்கி நிற்கின்றன என்கிறார்கள்.

காரைதீவு பிரதேச சபையைப் பொறுத்தவரையில் இந்தத் தடவை முதல் இரு வருடங்களுக்கும் ஜெயசிறிலைத் தவிர்த்து வேறு ஒருவருக்கு அந்தப் பதவியைக் கொடுப்பதற்குக் கட்சித் தலைமை தீர்மானித்துவிட்டது. முதலில் பாஸ்கரனையும் கடைசி இரண்டு வருடங்களும் ஜெயசிறிலும் தவிசாளர்களாக இருப்பார்கள் என்பதே கட்சியின் முடிவு. ஆனால், இந்த முடிவு காரைதீவு தமிழ் அரசுக் கட்சிக்குள் சில பல குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. ஜெயசிறில் சுமந்திரனுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த காரணத்தால்தான் அவர் பழிவாங்கப்படுகின்றார் என்ற வகையில் கதையாடல்கள் இடம்பெறுகின்றன. அதைத் தாம் ஏற்கப்போவதில்லை என்று பிரதேசசபை உறுப்பினர்கள் சிலர் வெளிப்படையாகவே கூறுகின்றனர். அதனால், அங்கு கடைசியில் என்ன நடக்கும் என்பதை பரபரப்பான திரைப்படத்தின் உச்சக் காட்சி போன்று பார்த்திருக்க வேண்டிய கட்டாயம். காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான மோகனதாஸ், புவனேந்திரன் ஆகியோர் ஜெயசிறிலுக்கு ஆதரவாக நிற்கின்றார்கள். இந்த நிலையில், யாழ்ப்பாணத்திற்கு வெளியே தொடரும் வீடு - சங்கு கள்ளக் காதல் காரைதீவிலும் வெற்றிபெறுமா அல்லது இந்த உள்வீட்டுக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சங்கூதுவார்களா என்பதையும் தெரிந்துகொள்ள ஆவலோடு காத்திருப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஒந்தாச்சிமடத்தில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடரவுள்ளது.

இதுதொடர்பில் அருட்தந்தை ஜெபரட்ணம் மேலும் தெரிவித்ததாவது:

உணர்வுபூர்வமான நிகழ்வில் கலந்து கொண்டுள்ளோம். தமிழ்மக்களின் வாழ்வில் நிண்டகால ஏற்படுத்தப்பட்ட பல அழிவுகளுக்கு நிதிகோரி இப்போராட்டம் நடாத்தப்படுகிறது.

இது மக்களின் மனங்களில் அழியாத தாகமாக இருக்கிறது. இதுவரை காலமும் நிகழ்த்தப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். இதனை உலக மக்கள் அனைவரும் சேர்ந்து செயற்படுத்த முன்வர வேண்டும்.

உலக நாடுகள் எல்லாம் எங்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகளை அறிந்திருந்தாலும் அதைப்பற்றி எந்தவிதமான நீதியும் கிடைக்காமல் மக்கள் நிண்டகாலமாக அணையாத தாகத்தோடு அலைந்து கொட்டிருக்கிறார்கள்.

ஆகவே இவற்றுக்கு எல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தோடு இந்த அணையா தீபம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது .

குறிப்பாக நாங்கள் நிக்கின்ற செம்மணி பிரதேசத்திலே மனித புதை குழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. பல அப்பாவி மக்களது மனித எலும்புக்கூடுகள் ,எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுவரும் இந்த சூழலில் இந்த நிகழ்வு மிகவும் முக்கியமானதாகும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடுகின்ற இந்த வேளையில் யூத்தத்தின் இறுதி நாட்களில் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்று தேடுகின்ற, கேள்விகேட்கின்ற இந்த நாட்களில் மனித புதை குழிகள் பயங்கரமான ஒரு பதிவுகளை ,கதைகளை எங்களுக்கு செல்லிக் கொண்டிருக்கின்றன.

ஆகவே இவற்றை நாங்கள் உதாசினம் செய்து கொண்டிருக்காது இந்த அரசாங்கமும் உலக நாடுகளும் இந்த சந்தர்பத்தில் மக்கள் எதிர்பார்க்கின்ற நியாயமான நீதியை வழங்க வேண்டும்.

இனிமேலும் தாமதிக்க கூடாது நீதியை பெறுவதற்கு தடையாக இருக்கின்ற எல்லா விதமான தடைகளையும் நீக்கி நியாயமான முறையில் நீதி கிடைக்க வேண்டி இப்போராடம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. மக்கள் உணர்வேடு பங்குபற்றி இப்போராட்டத்திற்கு வலுச் சேர்க்க வேண்டும் என்றார்.

## கட்டாரில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களானசாணக்கியன், ஸ்ரீநேசன் மற்றும் சிறிநாத், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டதுடன் மாநகரசபை மற்றும் பிரதேசசபைகளின் தவிசாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் பேரணியாக நடந்து சென்றவர்கள் பின்னர் பாலத்தின் நடுப்பகுதியில் தீப்பந்தங்களை ஏந்தியவாறும் குரல் எழுப்பினர். இலங்கை வந்துள்ள ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் உயராணையரின் கவனத்தை புதைகுழிகளின் மீதான நீதி விசாரணையின் மீது திருபபும் நோக்கத்துடன் இந்தப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன.

## தமிழர்களுக்கான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடப்பட்டுள்ளன, அதே நேரத்தில் ஒரு விமானம் ரியாத் விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஃபிட்ஸ்ஏர் விமானம் துபாய்க்கு திருப்பி விடப்பட்டுள்ளது. இந்த விமானங்கள் குவைத், அபுதாபி மற்றும் தோஹாவுக்கு பறந்து கொண்டிருந்ததாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையில் தரையிறங்க ஏதேனும் விமானங்களுக்கு அனுமதி கோரப்பட்டால், மத்தள விமான நிலையமும் கட்டுநாயக்க விமான நிலையமும் தயாராக இருப்பதாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

## வலி. வடக்கு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்கள், ஆர்வலர்கள், இந்தப் போராட்டத்தை ஆதரிப்போர் என்று பல தரப்பினரும் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

90 ஆம் ஆண்டு போர் காரணமாக, பலாலி இராணுவ முகாமிலிருந்து படையினர் முன்னேறத் தொடங்கியதை அடுத்து இந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வெளியேறியிருந்தார்கள். எனினும் போர் முடிந்து 15 ஆண்டுகளாகிவிட்டபோதும் அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இன்னமும் இவர்கள் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக காணிகள் வைத்திருப்பதாக கூறிய படையினர், தற்போது போர் அற்ற நிலையிலும் காணிகளை விடுவிக்காமல் வைத்திருப்பது ஏன் என்று போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தமிழ் மக்கள் மத்தியில் அதிக அக்கறை கொண்டுள்ளோம் எனக் கூறுகிற புதிய ஆளும்தரப்பாவது தமது பிரச்சினைக்கு ஒரு முடிவுதரும் என்று எதிர்பார்த்துச் சலித்துப்போன நிலையில் அவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். எனினும் அதன் பின்னரும் ஆளும்தரப்பு தமது பிரச்சினை குறித்து அக்கறை கொள்ளவில்லை என்பது குறித்தும் அவர்கள் க-டும் விசனமடைந்துள்ளனர்.

## பொருளாதார....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு நாடுகளிலிருந்தே எமக்கு அதிகளவான அந்நிய செலாவணியும் கிடைக்கின்றது. 2024 முதல் காலாண்டில் இஸ்ரேலிலிருந்து 20 25 மில்லியன் டொலர் அந்நிய செலாவணி கிடைத்துள்ளது.

வருடத்துக்கு சுமார் 100 மில்லியன் டொலர் இஸ்ரேலிலிருந்து மாத்திரம் கிடைக்கப் பெறுகின்றது. இவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து கிடைக்கும் அந்நிய செலாவணி உறுதியற்ற நிலையை அடையக்கூடும்.

அமெரிக்காவின் தலையீட்டுடனான இந்த பூகோள மோதல் நிலைமைகளில் இலங்கையும் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இலங்கையின் ஏற்றுமதிகளில் அமெரிக்கா முன்னிலை வகிக்கிறது. அதனையடுத்து ஐரோப்பிய பிராந்தியம் மற்றும் சீனா என்பன காணப்படுகின்றன. எனவே தான் இந்த மோதல்கள் இலங்கையில் நேரடிய தாக்கத்தை செலுத்தும் எனக் குறிப்பிடுகின்றோம்.

ஈரானுக்கு பெருமளவில் தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதிலும் பாதிப்பு ஏற்படக் கூடிய அபாயமும் நிலவுகிறது. இஸ்ரேலுக்கும் குறிப்பிட்டளவு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுவதோடு, இறக்குமதிகளும் உள்ளன.

இவ்வாறு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

உலக சந்தையில் எரிபொருள் விலையுடன் இலங்கையின் எரிபொருள் விலையை சமநிலைப்படுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது.

எரிபொருள் விலை சமநிலைப்படுத்தப்படாவிட்டால் பின்நாட்களில் ஏனைய விளைவுகள் ஏற்படக் கூடிய ஆபத்தும் காணப்படுகிறது. அத்தோடு இராஜதந்திர ரீதியிலும் திட்டமிடல்களை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக இவ்வாறான நிலைமைகளால் இலங்கையில் பொருளாதார மந்த நிலைமை ஏற்படக் கூடிய அபாயமும் காணப்படுகிறது. 2028இல் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படக் கூடும்.

எனவே பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய பொருளாதார மறுசீரமைப்புக்களை முன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். எவ்வாறிருப்பினும் இறக்குமதிகட்டுப்பாடுகள் இதற்கு பொறுத்தமான தீர்வாக அமையாது.

ஆனால் உலக சந்தையில் எரிபொருள் விலையுடன் இலங்கையில் எரிபொருள் விலை சமநிலைப்படுத்தப்பட்டால், இறக்குமதிகள் இயல்பாகவே மட்டுப்படும். விலைகள் உயர்வடையும் போது அவற்றின் பாவனைகளும் படிபடிப்படியாகக் குறைவடையும்.

எரிபொருள் விலை அதிகரிக்கும் பட்சத்தில் ஏனைய இறக்குமதிகளுக்கான செலவினையும், எரிபொருள் இறக்குமதியில் உள்ளடக்க வேண்டும்.

இவ்வாறான நிலைமையில் முறையான நிதி முகாமைத்துவம் இல்லாவிட்டால் அந்நிய செலாவணி இருப்பிலும் அது தாக்கம் செலுத்தக் கூடிய வாய்ப்புள்ளது. அதனை விடுத்து நேரடியாக இறக்குமதிகளால் அந்நிய செலாவணி இருப்பிற்கு பாதிப்பு ஏற்படாது.

காரணம் ஏற்றுமதி வருவாய், சுற்றுலாத்துறை வருவாய் உள்ளிட்ட சேவை ஏற்றுமதியூடாக கிடைக்கப்பெறும் டொலர்களே இறக்குமதிக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

ரூபாவின் பெறுமதியைப் பேணுவதும் இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மாறாக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தால் பணவீக்கம் அதிகரிக்கும் என்றார்.

## நேற்று...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இந்த பயணத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையும் சந்திக்கவுள்ளார். அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திர சமூக உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் நடத்தவும் அவர் திட்டமிடப்பட்டுள்ளார்.

வோல்கர் டர்க், தலதா மாளிகையில் வழிபாடு நடத்தவும், மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்குச் சென்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்களைச் சந்திக்கவும் அவர் திட்டமிடப்பட்டுள்ளார் என்றும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# தமிழ்க் கவியுலகில் தனிக்கொடி ஏற்றினார் !

முத்தமிழ் வாழ்த்த முத்தையா பிறந்தார்
சொத்தாகத் தமிழைச் சேர்த்துமே வைத்தார்
கம்பனைத் தொட்டார் கவிமழை பொழிந்தார்
கண்ண தாசனாய் கவி மன்னரானார்

பக்தியில் திளைத்தார் பரமனைத் துதித்தார்
நெற்றியில் நீறும் பொட்டுமாய் திகழ்ந்தார்
ஆலயம் சென்றார் அரனை வணங்கினார்
ஆத்திக வாதியாய் ஆனந்தம் அடைந்தார்

அரசியல் அலையால் அள்ளுண்டு போனார்
ஆத்தீக அகத்தில் நாத்திகம் நுழைந்தது
விதண்டா வாதம் பேசினார் எழுதினார்
வீணாய்க் காலம் கழித்தார் இருளில்

சாமியை ஏசினார் சாத்திரம் எதிர்த்தார்
சங்கர மடத்தைத் தகர்ப்பேன் என்றார்
தேவார புராணம் தீயிட முனைந்தார்
திசை அறியாமல் சிக்கினார் இருளில்

நாத்திகம் என்பது நஞ்சென உணர்ந்தார்
ஆத்தீகம் அவரை அணைத்துமே நின்றது
கண்ணனைப் பாடினார் காஞ்சியை நாடினார்
திருமுறை படித்தார் திளைத்தார் பக்தியில்

பக்திப் பாடல்கள் பற்பல பாடினார்
பாமரர் விளங்க பலவும் பாடினார்
தத்துவம் பாடினார் சித்தரைப் போலவே
இத்தரை பயனுற எழுதினார் எழுதினார்

உரைநடை உலகில் உயர்ந்தே நின்றார்
உரைநடை கூட கவிநடை ஆனது
உள்ளம் அமர உரைநடை அமைந்தது
கவி கண்ணதாசன் உரை மன்னரானார்

திரைக்கதை வசனம் காவியம் ஆனது
கவிதை நடையில் வசனம் எழுந்தது
கவித்துவ நிலையைக் காட்டியே நின்றார்
கவி கண்ணதாசன் கலைமகள் வரமே

சமயங் கடந்து தமிழை எழுதினார்
அவலம் களைந்திட அதிகம் எழுதினார்
மனதில் பட்டதை வண்ணமாய் வடித்தார்
மாபெரும் கவியாய் திகழ்கிறார் மனங்களில்

வெள்ளித் திரைக்கு அள்ளிக் கொடுத்தார்
வேதனை சோதனை சாதனை பாடினார்
தத்துவப் பாடலை முத்திரை ஆக்கினார்
தமிழ்க் கவியுலகில் தனிக்கொடி ஏற்றினார்



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்- ஆஸ்திரேலியா**

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
• CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாக்குறுதிகளை நிறைவேற்றும் தருணம்

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க் தற்போது இலங்கைக்கு வந்துள்ளார்கள். அவரின் மூன்று நாள் பயணம், இலங்கைஅரசியல்மற்றும்மனிதஉரிமைசூழலுக்குள் சர்வதேசப்பார்வையைக்கொண்டுவரக்கூடியமுக்கிய நிகழ்வாக பார்க்கப்படுகின்றது. ஆனால், இந்த வருகை ஒரு சின்னத்தைவிட அதிகமாக இருக்க வேண்டும். இது நியாயத்திற்காகக் காத்திருக்கும் ஆயிரக் கணக்கான மக்களின் எதிர்பார்ப்புக்கு விடையாக அமையவேண்டும்.**

**ஆணையர் டர்க், கடந்த கால மனித உரிமை மீறல்கள், காணாமல் போனோர், கண்காணிப்பு வன்முறைகள், மற்றும் இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் போன்ற முக்கிய பிரச்சினைகள் குறித்து நேரடியாகப் பார்வையிட்டு பேசவேண்டும். இலங்கை ஆளும்தரப்புடன் நட்புறவு பேணும் காரணங்களுக்காக உண்மைகளை மருவாது, அரசியல்ஈடுபாடுகளுக்குள்சிக்காமல், பாதிக்கப்பட்ட மக்களின் குரலாகவே செயல்படவேண்டும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு நேரில் சென்று அங்குள்ள மக்கள் வாழ்க்கையின் உண்மைத்தன்மையைப் பார்க்கவேண்டும். புதைகுழிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், மற்றும் நில அபகரிப்பு போன்ற விடயங்களில் பக்கவாட்டின்றி விசாரிக்கவேண்டும்.**

**மாறாக, இலங்கைஆளும்தரப்பும்இந்தவருகையை வெறும்நெடுகிய உரையாடல்களாக மட்டுப்படுத்தாமல், பயனுள்ள கலந்துரையாடலுக்கான வாயிலாகப் பார்க்கவேண்டும். முன்னர் வழங்கிய ஐ.நா. தீர்மானங்களுக்கானவாக்குறுதிகளைத்தொடர்ந்து, அவற்றை நடைமுறைப்படுத்தும் திட்டங்களையும் முன்வைக்க வேண்டும். விசாரணைகளின் சுதந்திரமும், நீதியின் நம்பிக்கையையும் மீட்கும் முயற்சிகளும் தற்போது மிக அவசியம். சர்வதேச விசாரணைகளுக்கான வாய்ப்பை மறுக்காத வகையில், உள்ளூர் விசாரணைகளின் நம்பகத்தன்மையை நிறுவ வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருக்கின்றது.**

**வோல்கர் டர்க்கின் வருகை சர்வதேசத்தில் மட்டும் முக்கியமல்ல; இலங்கையின் எதிர்கால ஜனநாயகத்தின்பாதையிலும்அதுஒருமையத்திலுள்ள சம்பவமாக இருக்கின்றது. அந்த வருகையின் பின்னணியில் புறப்பட வேண்டியது உண்மைச் செயல்பாடுகளே ஆகும். அரங்குக்குள் உரையாடும் அரசியலைவிட, அரங்கிற்குப்புறம் பதில்கள் எதிர்பார்க்கும்மக்களின்உணர்வுகளுக்குபதிலளிக்க வேண்டிய தருணம் இது.**

**எனவே, இந்த பயணம் வெறும்** Diplomatic visit**– ஆக அல்லாமல், ஒரு நீதிப் பயணமாக அமைய வேண்டியது ஆளும்தரப்புக்கு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையருக்கும் மீற முடியாத பொறுப்பாகும்.**

## திருநெல்வேலியில் உணவகத்திற்கு 'சீல்' சுகாதாரமற்ற கடைக்கு ரூ-. 1 லட்சம் தண்டம்

யாழ்ப்பாணத்தின் மொத்த விற்பனை மையமாக மாறிவரும் திருநெல்வேலியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றுக்கு நீதிமன்ற உத்தரவின்படி 'சீல்' வைக்கப்பட்டுள்ளது. அதே குற்றச்சாட்டில் பலசரக்குக் கடை ஒன்றுக்கு ரூபா ஒரு லட்சம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் நிர்மலானந்தன் அவர்களின் ஆலோசனையிலும், வழிகாட்டலிலும் உணவகங்கள், பலசரக்கு கடைகளில் சுகாதார நிலைமைகள் அவ்வப்போது பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

ஜூன் 5 திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால் பலசரக்கு கடை பரிசோதிக்கப்பட்டது. திகதி காலாவதியான பொருட்கள், சுட்டுத்துண்டு இன்றிய பொருட்கள் என ஏராளமான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

நீதிமன்றத்தில் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. நீதிவான் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்தார்.

ஜூன் 21 உணவகம் ஒன்று சோதனைக்குள்ளாக்கப்பட்டது. ஏற்கனவே பலதடவைகள் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டபோதும், சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தல்களை கவனத்திற்கொள்ளாமல், குறைபாடுகள் எவற்றையும் அந்த உணவகம் சீர் செய்யாததை அடுத்து அதற்கெதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ். மேலதிக நீதிவான் மன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த விழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, உணவக உரிமையாளரிற்கு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான், சுகாதார நடைமுறைகளிற்கு அமைவாக உணவகம் சீர் செய்யப்படும் வரையில் அதனை இழுத்து மூடி 'சீல்' வைக்குமாறும் உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய உணவகம் 'சீல்' வைத்து மூடப்பட்டது.

## வடக்கில் டிசெம்பருக்குள் இலவசமாக 6.5 லட்சம் தென்னைகள் வழங்கல்

### தென்னை பயிர்ச் செய்கை சபை அறிவிப்பு

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய வடக்கு தென்னை முக்கோண வலயத்திற்கான தொடக்கமாக இந்தாண்டு டிசம்பருக்குள் 650,000 இலட்சம் தென்னை செடிகளை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்துள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு பிராந்திய முகாமையாளர் ஈஸ்வரன் சற்குணன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2030ஆம் ஆண்டு மொத்த உற்பத்தியில் 4200 மில்லியன் தேங்காயை உற்பத்தி செய்யும் நோக்குடன் வடக்கு தெங்கு வலயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வருட டிசெம்பர் மாதத்திற்குள் 650000 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கும் திட்டத்தில் 72000 தென்னங்கன்றுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு நடுகைத்திட்டம் மூலம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றது என்றார்.

## ஆடம்பர சொத்துக்கள் வைத்திருக்கும் அரசியல்வாதிகள் குறித்து விசாரணை

கொழும்பில் ஆடம்பர சொத்துகளை சேகரித்துவைத்திருக்கும் அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுதிணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளின் கூற்றுப்படி, ஆடம்பர சொத்து தொடர்பான விசாரணைகளில் முன்னாள் அமைச்சர்கள் பலர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஆடம்பர சொத்துகளை சேகரித்து வைத்திருக்கும் சுமார் 28 அரசியல்வாதிகள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஒருவரின் சொத்துக்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல தரப்புகளிலிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டுள்ள சொத்துகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம்
சொத்துத்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2025இல் வெளியிடப்பெற்றது